செ.வெ.எண்:- 49.
நாள்:- 22.04.2021

## பத்திரிக்கை செய்தி

கோயம்புத்தூர் மாவட்டம், பொள்ளாச்சி தாலூக்காவில் பொள்ளாச்சி அரசு மருத்துவமனையுடன் இணைந்து **P.A.**கல்லூரி வளாகத்தில் 600 படுக்கை வசதி கொண்ட அரசு **Covid Care Centre** தற்போது இயங்கி வருகிறது. பொள்ளாச்சி மற்றும் அதன் சுற்று வட்டாரப் பகுதிகளில் உள்ள பொது மக்கள் அதிக தூரம் சென்று சிகிச்சை பெறுவதை தவிர்க்கும் பொருட்டு, பொள்ளாச்சி பகுதி மக்களின் வசதிக்காக, கொரோனா சிகிச்சை அளிக்கும் பொருட்டு **MRS** மருத்துவமனை மற்றும் ஆனைமலை தாலூக்காவில் இயங்கி வரும் **T.D.**நாயர் மருத்துவமனையும் இணைந்து பொள்ளாச்சி, கோயம்புத்தூர் சாலையில் உள்ள சக்தி ஹோட்டலில் கொரோனா நோயாளிகளுக்கு சிகிச்சை அளிக்க தனியார் **Covid Care Centre** – ஆக எடுத்து நடத்திட அனுமதி கோரியதற்கு கோவை மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்கள் அந்த ஹோட்டலில் 55 அறைகளில் 110 படுக்கை வசதி கொண்ட **Covid Care Centre** – ஆக இயங்க அனுமதி வழங்கியுள்ளார். மேலும் பொள்ளாச்சி மற்றும் அதன் சுற்று வட்டார பொது மக்கள் இவ்வசதியினை பயன்படுத்திக் கொள்ளலாம் என்று கோவை மாவட்ட ஆட்சித் தலைவர் தெரிவித்துள்ளார்.

22/4/21

மாவட்ட ஆட்சித் தலைவர்,
கோயம்புத்தூர்